**தும்பனே பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஜூன் 16 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 09 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 10 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தும்பனே பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண எழுச்சி ஏற்பாடுகளின் கீழ் சரத் அமுனுகம விளையாட்டரங்கம் அபிவிருத்தி செய்வதற்காக செலவிடப்பட்ட ரூபா 3,053,758 இற்கான தொகையினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது இலங்கை ஆயுள்வேத கூட்டுத் தாபனத்தில் இருந்து கிடைத்திருந்த மருந்து வகை இருப்பின் பெறுமதி ரூபா 240,000 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) 2012 ஆண்டின் போது மலை நாடு அபிவிருத்தி அதிகார சபையில் இருந்து நன்கொடையொன்றாக கிடைத்திருந்த 20 கணனிகளின் பெறுமதியினை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஈ) 2013 ஆண்டின் போது நன்கொடை ஒன்றாக கிடைத்திருந்த ரூபா 231,900 பெறுமதியான மெய்வளர்ச்சி உபகரணங்கள் மற்றும் துணைக் கருவிகளைக் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(உ) சபைக்குச் சொந்தமான 111 காணித் துண்டுகளின் பெறுமதியாகிய ரூபா 99,260 இனை மற்றும் பெறுமதியினை இனங்கண்டிருக்காத 08 காணித் துண்டுகளின் பெறுமதியினை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டின் போது நன்கொடையாகக் கிடைத்திருந்த 67 நிலையான சொத்து விடயங்களின் பெறுமதி ரூபா 787,358 இனை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(எ) முன்னைய ஆண்டின் போது ரூபா 232,140 தொகைக்கு கொள்வனவு செய்திருந்த சென்றிக் தண்ணீர் பம்பு ஒன்றின் பெறுமதியினை ரூபா 2,232,140 தொகை என மூலதனப்படுத்தியிருந்தமையால் சொத்துக்கள் கணக்கு மற்றும் மூலதன செலவீட்டிற்கான அரசிறை உதவுத் தொகை கணக்கு ரூபா 2,000,000 இனால் மிகையாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஏ) பொறியும் பொறித்தொகுதியின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 106,995 இற்கான பயோஷெல் தொட்டியின் பெறுமதி தளபாடங்கள் மற்றும் பொறுத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஐ) பொறியும் பொறித் தொகுதியின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 964,000 இற்கான பாதை தகர்க்கும் இயந்திரத்தினை மோட்டார் வாகனக் கணக்கில் ரூபா 960,000 தொகை என காட்டப்பட்டிருந்தது.

(ஓ) உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சில் இருந்து மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த ரூபா 442,858 இற்கான கல்வணய்ஸ் குழாய்கள் (GI) 400 இன் பெறுமதியினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஓ) சபையில் பௌதீக நிதியாகக் காணப்படாத ரூபா 66,915 பெறுமதியான 30 சொத்து விடயங்கள் கணக்குகளில் காட்டப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக செயற்பாடுகள் எதுவும் கடைபிடிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுபபாட்டுக் கணக்குகள்

---

02 கணக்கு விடயங்களின் கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதி, பட்டோலையுடன் ஒப்பீடு செய்யும் போது ரூபா 2,823,690 இற்கான இணக்கமின்மை வெளிப்படுத்தப்பட்டது.

1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---

02 கணக்கு விடயங்கள் தொடர்பாக தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 17,187,938 இற்கான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது.

1.3.4 பெற வேண்டிய கணக்குகள்

---

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 04 கணக்கு விடயங்களின் கூட்டுப் பெறுமதி ரூபா 134,068,013 ஆகக் காணப்பட்டதுடன் அவற்றில் 01 வருட காலத்தை மிகைத்துள்ள கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 11,976,631 ஆகக் காணப்பட்டது.

1.3.5 செலுத்த வேண்டிய கணக்குகள்

---

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 02 செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 125,993,137 ஆகக் காணப்பட்டதுடன் அவற்றில் 02 வருட காலத்தை மிகைத்திருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 15,534,964 ஆகக் காணப்பட்டது.

1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

---

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போத அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங் களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம் | |
| பிரிவு132 | பிரதேச சபை நிதியத்திலிருந்து செலவுகள் மேற்கொள்வதற்கு வசதி அளிக்கப்பட்டிருக்காத செயற்பாடு ஒன்றாக தலைவரின் விபரங்கள் அடங்கிய சீட்டு (Visiting Card) அச்சிடுவதவற்காக ரூபா 18,000 செலவிடப்பட்டிருந்தது. |

(ஆ) இலங்கை குடியரசின் தாபனக் கோவை

| | |
|---|---|
| (i) நி.பி. 371 | பல்வேறு காரணங்களுக்காக வழங்கப்படும் முற்பணங்கள் குறிப்பிட்ட விடயம் முடிவடைந்த உடனேயே தீர்க்கப்பட வேண்டும். எனினும் 04 சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்த ரூபா 36,525 இற்கான முற்பணங்கள் 03 வருடங்களை விட மிகையான காலம் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நி.பி. 571(2) | ரூபா 259,021 தொகை பெறுமதியான 17 வைப்பு விடயங்கள் தொடர்பாக குறிப்பிட்ட பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

(இ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவை

| | |
|---|---|
| பிரிவுகள் 177 மற்றும் 178 | கேள்வி நடைமுறை கடைபிடிக்கப்படாமல் ரூபா 5,819,483 தொகை பெறுமதியான 19 நிர்மாண வேலைகளுக்காக சனசமூக அமைப்புக்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 15,772,071 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,778,774 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 13,993,297 இற்கான முன்னேற்றம் ஒன்று காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வீத வரி

(அ) மீளாய்வாண்டிற்கான வீத வரி சிட்டையிட்டவைகளின் பெறுமதி ரூபா 880,810 ஆகக் காணப்பட்டதுடன் ஆண்டின் போது அறவீடுகள் ரூபா 554,540 ஆக காணப்பட்டதுடன் அறவீடுகளின் சதவீதம் நூற்றிற்கு 63 ஆகியிருந்தது. மேலும் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை வீத வரி மீதி ரூபா 458,987 ஆகும். அந்த நிலுவை மீதி தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவுகள் 158(1) மற்றும் 159(1) இன் பிரகாரம் 2015 ஜூலை 10 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் வீத வரி அறவிடப்படும் ஆதனங்களை 05 வருடங்களுக்கு ஒரு முறை பெறுமதி மதிப்பீடு செய்து வீத வரி அறவிடப்பட வேண்டும். எனினும் 2004 ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட பெறுமதி மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டின் போது வீத வரி தீர்மானிக்கப்பட்டு அறவீடு செய்யப்பட்டுள்ளது.

2.2.2 நீர்க் கட்டணம்

------------------------

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு ரூபா 359,028 இற்கான நிலுவை ஒன்று காணப்பட்டதுடன் அம் மீதியில் வருட இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 86,696 தொகையொன்று அறவிடப்படாமல் காணப்பட்டது. ஆண்டின் போது சிட்டையிட்டவைகளில் வருட இறுதியில் நிலுவை ரூபா 279,592 தொகையாகும். நீர்க் கட்டண அறவீடுகள் பலவீன நிலையில் காணப்பட்டதுடன் அந்நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக முறையான செயற்திட்டமொன்றினை கடைபிடிக்காமையால் ஆரம்ப மீதியில் ரூபா 272,294 தொகை வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

2.2.3 முச்சக்கர வண்டிக் கட்டணம்

-----------------------------------------------

மீளாய்வாண்டு ஆரம்ப திகதியில் உள்ளவாறு ரூபா 917,850 தொகையான நிலுவை ஒன்று காணப்பட்டதுடன் அம் மீதியில் வருட இறுதித் தினத்தில் உள்ளவாறு ரூபா 307,650 தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை. ஆண்டின் போது சிட்டை இடப்பட்டவைகளில் நிலுவை மற்றும் ஆரம்ப மீதி இணக்கஞ் செய்யப்படாமை உட்பட சபையின் அதிகாரப் பிரதேசத்தில் முச்சக்கர வண்டி சங்கங்களில் இருந்து மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 774,450 இற்கான தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

2.2.4 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

--------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 554,539 உம் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 7,678,600 உம் பெற வேண்டியிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

-------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபையின் திரண்ட நிதியம் ரூபா 11,479,250 இற்கான வரவு மீதியொன்று காணப்பட்டதுடன் இந்த நிலைமை 02 வருடங்கள் முதல் தொடர்ந்தும் காணப்பட்டது. கடந்த 02 வருடங்களில் சபையின் நிதி விளைவுகளிலும் பற்றாக்குறை ஒன்று காணப்பட்டது.

(ஆ) உள்ளூராட்சி அமைச்சில் இருந்து பிரதேச சபைகளை வலுப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மூலதன தன்மையுள்ள விடயங்களின் பராமரிப்புக்காக மீளாய்வாண்டின் போது வழங்கியிருந்த ரூபா 4,000,000 இற்கான தொகை குறிப்பிட்ட வேலைகளுக்காக பயன்படுத்தப்படாமல் சபையின் சம்பளம் செலுத்துவதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது.

(இ) மருந்து வகைகள், நீர்க் குழாய்கள் போன்ற ஆண்டின் போது முற்றாக விநியோகிக்கப்படாத பண்டங்களின் கொள்வனவுகளை கணக்கீடு செய்யும் போது களஞ்சிய முற்பணக் கணக்கு முறையினைக் கடைபிடித்திருக்கவில்லை.

3.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

--------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 3,419,619 பெறுமதியான 04 சொத்து விடயங்கள் 02 வருடங்களை விட மிகையான காலம் முதல் பயன்படுத்தப்படாமலும் குறை பயன்பாட்டுடனும் காணப்பட்டது.

3.3 ஒப்பந்த நிருவாகம்

------------------------------

(அ) உடதெனிய பாதையை அபிவிருத்தி செய்தல்

-------------------------------------------------------------------------

பாதையின் இரு மருங்கிலும் உள்ள வாய்க்கால்களை அபிவிருத்தி செய்த பின்னர் மண் நிறைக்கப்பட்டு கொங்கிரீட் போடப்பட்டிருந்த போதிலும் பாதையை இரு பகுதியிலும் உள்ள மண் அரிப்புக்கு உள்ளாகியிருந்ததால் பாதையின் பேணுவதற்கு பாதகமாகியிருந்ததென 2015 மார்ச் 16 திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(ஆ) வெலிவிட எகொடகந்த பாதை அபிவிருத்தி செய்தல்

-------------------------------------------------------------------------------------

2015 மார்ச் 11 திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) பாதையின் ஆரம்பம் முதல் 15 மீட்டர் தூரத்தில் பாதையில் 09 அடி அகலத்தில் வெடிப்பு ஏற்பட்டிருந்தது.

(ii) கொங்கிரீட் பாதை படையின் விரிவடைதல் இணைப்புக்கள் குறைந்த அளவு 10 அடி வீச்சில் போடப்பட வேண்டும். எனினும் விரிவடைதல் இணைப்புக்கள் பாதை ஆரம்பிக்கப்பட்ட இடத்தில் இருந்து 66 மீட்டர் தூரத்தில் அந்த இடத்தின் முதல் 44 அடி தூரத்திலும் போடப்பட்டிருந்தது.

(இ) தொடங்கொல்ல பாதையை அபிவிருத்தி செய்தல்

------------------------------------------------------------------------------

ரூபா 997,000 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த பாதை தொடர்பாக 2015 மார்ச் 11 திகதி மேற்கொள்ளப்பட்டிருந்த பௌதீகப் பரிசோதனையின் போது பாதையில் சில இடங்களில் வெடிப்படைந்து காணப்பட்டதுடன் மதிப்பீட்டின் பிரகாரம் 1:2:4(3/4)” கொங்கிரீட் கலவை போடப்பட வேண்டியிருந்த போதிலும் பாதைக்கு போடப்பட்டிருந்த கொங்கிரீட் கலவை மதிப்பீட்டின் நியமங்களுக்கு ஏற்ப போடப்படாமையால் கொங்கிரீட் இலேசாக உடைக்கக் கூடிய நிலைமையில் பலவீன நிலைமையில் காணப்பட்டது. அதே போல் ரூபா 7,000 செலவிடப்பட்டு பொருத்தப்பட்டிருந்த பெயர் பலகை அகற்றப்பட்டு காணப்பட்டது.

3.4 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

-----------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் ஒரு நாளைக்கு 5-6 தொன்கள் அளவான குப்பைகள் சேகரமாகின்றன. குப்பைகள் சேகரிப்பதற்காக 02 வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டு சேகரிக்கும் குப்பைகளை வகைப்படுத்தப்படாமல் சபைக்குச் சொந்தமான காணி ஒன்றில் போடப்படுகின்றது.

(ஆ) ஜெய்கா பயிற்சி பெற்றவர்களின் சங்கம் மற்றும் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சில் இருந்து திண்மக் கழிவுப் பொருள் தொடர்பாக பல்வேறு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், சுற்றாடல் அலுவலர்கள், செயலாளர், தொழில் நுட்ப அலுவலர்கள் மற்றும் புதிய பட்டதாரிகளுக்காக செயற்படுத்திருந்த போதிலும் குப்பை முகாமைத்துவம் தொடர்பாக முறையான நடைமுறை ஒன்று சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமுல் நடத்தியிருக்கவில்லை.

3.8 செயற்திட்ட தாமதம்

------------------------------------

கீணீகம நீர் திட்டத்திற்காக 2012 ஆண்டின் போது கமநெகும நிதியத்தின் கீழ் ரூபா 2,000,000 தொகை ஒன்று செலவிடப்பட்டிருந்த போதிலும் 2015 ஆண்டு வரை குறிப்பிட்ட நீர் திட்டத்தை செயற்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 பெறுகைகள் திட்டம்

ரூபா 224,354,714 இற்கான மூலதனச் செலவுகள் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான பெறுகைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

4.2 தொழிற்பாட்டுத் திட்டங்கள்

சபையினால் மீளாய்வாண்டின் போது தொழிற்பாட்டுத் திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை.

4.3 அகக் கணக்காய்வு

அகக் கணக்காய்வு அலுவலர் ஒருவர் நியமனம் பெற்றிருந்த போதிலும் போதியளவு கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டு ஐய வினாக்கள் அனுப்பியிருக்கவில்லை.

4.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிராகரம் மதிப்பீட்டு வருமானங்கள் மற்றும் செலவுகள், உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகளுடன் இணக்கஞ் செய்யும் போது 04 வருமான விடயங்களில் நூற்றிற்கு 30 முதல் நூற்றிற்கு 100 வரையும், 07 செலவு விடயங்களில் நூற்றிற்கு 29 முதல் நூற்றிற்கு 100 இனை மிகைத்தும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) ஒப்பந்த நிருவாகம்
(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்